DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No.468/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 11 | நாள் | : | 24.02.2026 |
| பெயர் | : | மாரிமுத்து | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 24th day of February 2026.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வுபெற்று தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தென்காசி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது நானும், ஆய்வாளர் ஆடிவேல் தலைமையில், தலைமைக் காவலர் தனசேகர், வடிவேல்முருகன் என்பவரும், சீவலமுத்து என்பவரும், சிறப்பு கண்காணிப்பு பிரிவில் தனி அலுவலாக நியமிக்கப்பட்டோம். திரு.கோகுலகிருஷ்ணன் உதவி காவல் கண்காணிப்பாளர் எங்களை தனிப்படையாக நியமித்தார். எனவே நாங்கள் எங்கள் தனிப்படையில் கிடைக்கப் பெற்ற தகவலின்பேரில் 08.02.2020 அன்று களியாக்காவிளை சென்று 09.02.2020 ம் தேதி 16.30 மணிக்கு செய்தலி என்ற அனீஷ் என்பவரை தேடிச் சென்றபோது பேருந்து நிலையத்தில் திருவனந்தபுரம் பேருந்திலிருந்து இறங்கிய நபரை அடையாளம் கண்டு அவரை விசாரித்து உறுதி செய்து கொண்டு பின்னர் காரணம் கூறி கைது செய்து

17.30 மணிக்கு நேசமணிநகர் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தோம். காவல் நிலையத்தில் வைத்து அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அதை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளர் முன்னிலையில் ஆய்வாளர் கண்காணிப்பில் பதிவு செய்யப்பட்டது. பின்னர் களியாக்கவிளை சென்று இரவு 22 மணிக்கு மேற்படி எதிரி அவரது தாயாரின் வீட்டில் மறைத்து வைத்திருந்த மடிக்கணினி கத்தி, அலைபேசிக்கான சிம்கார்டு, செல்போன் சார்ஜர், மற்றும் ஒரு குரான் புத்தகம், உலக வரைபடம், இந்திய வரைபடம் உட்பட சுமார் 40 பொருட்கள் தன்னுடைய பயன்பாட்டில் இருப்பதாக எடுத்துக் கொடுத்தார். அதை மேற்படி இரண்டு சாட்சிகள் முன்னிலையில் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். இந்திய இறையாண்மைக்கு எதிராக செயல்பட்டதாக கூறி பொருட்களை எடுத்துக் கொடுத்தார். இது சம்பந்தமாக என்னை டி.எஸ்.பி. விசாரித்தார். நான் சொல்ல சொல்ல சுப்புலட்சுமி அதை கணினியில் தட்டச்சு செய்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

தனிப்படை அமைத்த உத்தரவு நகல் என்வசம் இல்லை. இன்று அதை நான் பார்க்கவும் இல்லை. நாங்கள் இங்கிருந்து புறப்பட்டு நாகர்கோவிலுக்கு சென்று அங்கு பேருந்துநிலையத்தில் தேடிப்பார்த்தோம் அங்கு இருக்கும்போது எங்களுக்கு தகவல் கிடைத்தது. நாங்கள் எந்தெந்த இடங்களில் எதிரியைத் தேடிச் சென்றோம் என்று துணை கண்காணிப்பாளர் விசாரணையில் குறிப்பிட்டுக் கூறவில்லை. ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவல் எந்த வடிவிலானது என்று எனக்கு தெரியாது. யார் மூலம் தகவல் கிடைத்தது என்றும் தெரியாது. பேருந்தில் இருந்து இறங்கிய நபர்கள் சுமார் 50 நபர்கள் இருக்கலாமா என்று சொன்னால் அதுபற்றி தற்போது ஞாபகமில்லை. களியாக்கவிளை என்பது ஒரு பெரிய நகர் என்றால் சரிதான். நாங்கள் எதிரியை அழைத்தபோது அங்கு பேருந்து நிலையத்தில் 200 நபர்களுக்கு மேல் இருந்திருப்பார்களா என்றால் அது தற்போது ஞாபகமில்லை. அது மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். அந்த இடத்திலிருந்து நேசமணி

நகர் காவல் நிலையம் சுமார் 15 கி.மீ. இருக்கும். எங்களுக்கு பாக்கெட் நோட் புத்தகம் உண்டு. அதில் அன்றாட பணிகளை குறிப்போம். அன்றைய தினம் நான் மேற்கொண்ட குறிப்புகளை பார்வையிட்டால் நான் முதல் விசாரணையில் கூறியுள்ள பணிகளை மேற்கொண்டேனா என்று தெரியும் என்றால் சரிதான். என்னுடைய பாக்கெட் நோட் புத்தகத்தை உயர் அதிகாரிகள் கேட்கும்போது கொடுக்க வேண்டுமென்றால் சரிதான். நேசமணிநகர் பகுதிக்கென தனியே கிராம நிர்வாக அலுவலர் உண்டு என்றால் சரிதான். அத்தாட்சியில் கைப்பற்றிய எலக்ட்ரானிக் பொருட்கள் பொதுவாக வெடி கடைகளில் கிடைக்கும் என்றால் சரிதான். அரசால் மடிக்கணினி அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டபின்னர் மடிக்கணினி பயன்படுத்துவது ஆடம்பர பொருள் அல்ல என்றால் சரிதான். அனைத்து வீட்டுக்களிலும் மடிக்கணினி உள்ளது என்றால் சரிதான். குரான் என்பது இஸ்லாமியர்கள் வீட்டில் இருக்கும் என்றால் சரிதான். அனைவரது வீட்டிலும் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் எதிரியின் தாயார் வீட்டிற்கு சென்றவிவரம் அந்த தெருவில் உள்ளவர்களுக்கு தெரியுமா என்று எனக்கு தெரியாது. நாங்கள் போகும் போது எதிரியின் அம்மா அங்கிருந்தார். எதிரியின் தாயார் வீடு களியாக்கவிளையில் எந்த தெருவில் எந்த பகுதியில் அமைந்துள்ளது என்று ஞாபகமில்லை. கதவு எண்ணும் ஞாபகமில்லை. நாங்கள் சென்ற வீட்டில் ஒரு வரவேற்பறை மட்டும்தான் இருந்தது. அந்த வீட்டில் எத்தனை அறைகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. எதிரி பொருட்களை எடுத்துக் கொடுத்த பீரோ மரத்தால்ஆனாதா இரும்பில் ஆனாதா என்று எனக்கு ஞாபகமில்லை. காணொளி காட்சியில் ஆஜர்படுத்தப்படும் எதிரிதான் அன்றைய தினம் நாங்கள் கைது செய்த எதிரிதான் என்று ஞாபகமில்லை. நேசமணிநகர் காவல் நிலையத்தில் நாங்கள் இருந்தபோது அந்த காவல் நிலையத்தின் வழக்கு விசாரணைக்காக பொதுமக்கள் எவரும் வந்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை. அனைத்து காவல் நிலையங்களிலும் சி.சி.டிவி கேமிரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி காவல் நிலையத்தில் காணொளி காட்சி பதிவுகளை பார்வையிட்டால் அன்றைய தினம் நாங்கள் நேசமணிநகர் காவல் நிலையத்திற்கு சென்றோமா இல்லையா என்று துலங்கும் என்றால் சரிதான். நாஙகள் தென்காசி காவல் நிலையத்திற்கு 10.02.2020 ம் தேதி வந்தோம் நாங்கள் காவல் நிலையத்திற்கு திரும்ப வந்த நேரம் அந்த காவல்நிலைய காணொளி காட்சியில் பதிவாகியிருக்கும் என்றால் சரிதாான். நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் களியாக்கவிளை சென்றதாக கூறுவதும் 6 வது எதிரியை கைது செய்ததாக கூறுவதும் அவர் காவல் நிலையத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக கூறுவதும் அதனடிப்படையில் எதிரியின் தாயார் வீட்டிற்கு சென்று பொருட்களை எடுத்துக் கொடுத்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. எங்கள் உயர்அதிகாரிகளின் அழுத்தம் காரணமாக நான் தயாரிக்கப்பட்ட ஆவணங்களுக்கேற்ப பொய் சாட்சிமயளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. களியாக்கவிளை பேருந்து நிலையத்தில் எதிரி இறங்கிய பேருந்து எந்த மாநிலத்திற்குரியது என்றும் அதன் பதிவு என்னவென்றும் எனக்கு தற்போது ஞாபகமில்லை. எதிரியை கைது செய்த விவரத்தை உறவினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் ஆய்வாளர்தான் அதை கூறியிருப்பார் எனக்கு தெரியாது.

**1,5 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு செல்லும் முன்பாக நாங்கள் மாவட்ட தலைமையகத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டுமா என்றால் எங்கள் தனிப்படையின் தலைவர் அதை தெரிவிக்க வேண்டும். ஆய்வாளர் அவ்வாறு தகவல் தெரிவித்தாரா என்று எனக்கு தெரியாது. கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும் தகவல் தெரிவித்தாரா என்று எனக்கு தெரியாது. களியாக்கவிளை பேருந்து நிலையத்திலிருந்து களியாக்கவிளை காவல் நிலையம் எவ்வளவு தொலைவில் உள்ளது என்று எனக்கு தெரியாது. நான் களியாக்கவிளை

காவல் நிலையம் செல்லவில்லை. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் களியாக்கவிளை சென்றதாக கூறுவதும் அங்கு எதிரியை பார்த்ததாக கூறுவதும் கைது செய்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாளில் கைது செய்திருந்தால் அவரை களியாக்கவிளை காவல் நிலையத்தில் ஒப்படைத்து விசாரித்திருப்போம் என்றால் சரியல்ல. கைது செய்த இடத்திற்கும் நேசமணிநகர் காவல் நிலையத்திற்கும் 40 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரியல்ல 8 முதல் 10 கி.மீ. தொலைவு இருக்கும். நான் சொன்ன நாளில் எதிரியை நேசமணிநகர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றதில்லை என்றும் எதிரியை கைது செய்யவேயில்லை என்றும் அதனால்தான் எனக்கு உண்மையான தூரம் தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. டி.எஸ்.பி.தான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.24 17:57:32 +0530